[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(i) திருச்சி மாவட்டத்தில் கடன் வசூலைத் தள்ளி வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து 41-வது விதியின்கீழ் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. நாராயணன் அவர்கள் ஒரு அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்.

திரு. இரா. நாராயணன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"திருச்சி மாவட்டம், அரியலூர், வேப்பூர், பெரம்பலூர், ஆலத்தியூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், செந்துரை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் மோட்டார் பம்புசெட் வாங்கி மின்சார இணைப்புக் கிடைக்காததால் பயன்படுத்த இயலாமல் வைத்துள்ளதாலும், அந்தக் கடன் தொகையை அதிகாரிகள் தற்போது வசூலிப்பதால் அவர்கள் அவதியுறுவதாலும் கடன் வசூலை ஓராண்டுக் காலம் தள்ளிப் போட வேண்டியதன் அவசியம்".

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (1) கடன் வாங்கியவரது கணக்கில் விசை யேற்றங்கள் வழங்கியது குறித்துக் கடைசியாகப் பற்றெழுதப்படுகிற தேதியிலிருந்து பன்னிரண்டு திங்கள்களுக்குக் குறையாமலும் பதினெட்டுத் திங்கள்களுக்கு மேற்படாமலும் உள்ள கால அளவின் போது கடனின் முதல் தவணையைத் திருப்பிச் செலுத்துவதற்கு மின்சார மோட்டார் விசையேற்றங்களை வழங்கல் குறித்த விதிகளின் 8-வது விதி வகை செய்கிறது. தற்போது செயலில் உள்ள ஆணைகளின்படி, மின்சார விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் மாநில மின்சார வாரியம் தாமதம் செய்வதெனக் கடனை வழங்கும் அதிகாரி மனநிறைவடையும் நேர்வுகளில், முதல் தவணையைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை 12 திங்கள்கள் வரையில் மேற்கொண்டும் நீட்டிக்கலாம்.

(2) அரியலூர் கோட்டத்தில் உள்ள பெரும்பாலான பகுதிகள் விருத்தாசலம் மின்சார ஏற்பாட்டின் கீழ் உள்ளன. இந்த ஏற்பாட்டின் கீழ் உள்ள இடங்களில் விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படாத நேர்வுகளில் முதல் தவணைத் தொகையை வசூலிக்க வேண்டாம் என்று வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கும், தாசில்தார்களுக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டக் கலெக்டர் இப்போது கட்டளைகள் பிறப்பித்துள்ளார்.